# தமிழியக்க வேர்கள்

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பு வெளியீடு

தமிழவேள், பதிப்புச் செம்மல்
முனைவர் ச. மெய்யப்பன்

மணிவாசகர் பதிப்பகம்
8/7 சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

# பேராசிரியர் சி. இலக்குவனார்

## (1910 - 1973)

தமிழுக்காக வாழ்ந்தோர் பலர்; தன்மானத்திற்காக வாழ்ந்த வரும் பலர்; தன்மான இயக்கத்தில் தளராமல் நின்று தமிழ் வளர்த்தோர் மிகச் சிலர்; அவர்களுள் ஒருவராகக் குறிப்பிடத்தக்கவர் கொள்கை மறவர் பேராசிரியர் சி. இலக்குவனார்.

### பிறப்பும் இளமையும்:

தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் எனப் புகழ் பெற்ற தஞ்சை மாவட்டம் தமிழுக்குத் தொண்டாற்றிய தறுகண் மறவர் களையும் தரணிக் கீந்து அறிவுக் களஞ்சியமாகவும் விளங்கும் பெருமையை உடையது.

தண்டமிழ் இயக்கத்தின் வேராக நின்று எதிர்ப்புகளுக்கு அஞ்சாமல் வெஞ்சிறையில் வாடிப் போராட்டமே தம் வாழ்க்கை யாகக் கொண்ட தமிழ் மறவர் இலக்குவனாரை ஈன்ற வீர விளைநிலம் தஞ்சை மாவட்டம்.

தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டத்தைச் சேர்ந்த வாய்மை மேட்டின் பகுதியான கீழக்காட்டில் சிங்கார வேலு அவர்களின் மூன்றாம் மகனாகப் பிறந்தவர் இலக்குவனார். தாயார் – இரத்தினம் அம்மாள். 15.7.1910 இல் இவர் பிறந்தார். இராமேசுவரம் கோயில் இலட்சுமணன் உருவச்சிலையைக் கண்டு சொக்கி நின்ற தாய்வழிப் பாட்டியார் இவருக்கு 'இலட்சுமணன்' என்று பெயர் வைத்தார்.

இலட்சுமணன் என்ற வடமொழிப் பெயர் 'இலக்குவன்' என்று தமிழ் முறைப்படி திரியும். கம்பரும் தமது இராமகாதையில் இலக்குவன் என்றே இச்சொல்லை ஆளுகின்றார்.

"விலக்கு மொய்ம்பின் விளங்கொளி நாமம்
இலக்குவன் என்ன இசைத்தனன் அன்றே"

இவர் அரசர் இராசாமடத்தில் நடுநிலைப் பள்ளியில் பயின்ற பொழுது அங்குத் தமிழாசிரியராக இருந்த சாமி. சிதம்பரனார் இலட்சுமணன் என்ற பெயரை 'இலக்குவன்' என மாற்றினார். சிதம்பரனாரின் பகுத்தறிவுக் கொள்கைகளும், தன்மான இயக்க



உணர்வுகளும் இவரது வாழ்க்கையில் கால் கொண்டு இவரைச் சீர்திருத்தச் செம்மலாக உருவாக்கின.

### கல்வி:

சுப்பையா ஆசிரியர் என்பவரிடம் திண்ணைப் பள்ளியில் இளமைக் கல்வி தொடங்கியது. ஆனால் இப்பள்ளி நீடித்து நடக்கவில்லை. பின்பு ஆசிரியர் கண்ணுசாமியிடம் தொடக்கக் கல்வி தொடர்ந்தது. பகற்பொழுதில் பாடம்; இரவில் நாடகம்; இசை, நடிப்பு போன்ற கலைகளில் இலக்குவனார் பயிற்சி பெற்றார். பின்னர் வாய்மை மேட்டு அரசு தொடக்கப் பள்ளியில் பயின்றார்.

அதன்பின் தஞ்சை மாவட்டத்தில் சரபோஜி மன்னரின் அறக்கட்டளைச் சார்பில் ராசாமடம் என்னுமிடத்தில் நடை பெற்றுவந்த நடுநிலைப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பில் சேர்ந்தார். உணவு விடுதியிலும் இடம் கிடைத்தது.

ராசா மடத்தில் இலக்குவனார் ஏட்டுக்கல்வியை மட்டும் பெறவில்லை. வாழ்க்கைக் கல்வியையும் கற்றார். அங்கே உயர் சாதி மாணவர்கள் உணவு விடுதியில் ஒருசில மாணவர்களைத் தாழ்ந்த குலத்தினர் என்று கூறி ஒதுக்கி வைத்த நிலை கண்டு இவர் உள்ளம் கொதித்தது. பின்னாளில் தந்தை பெரியாரின் தன்மான இயக்கத்தில் ஈடுபட்டுச் சீர்திருத்தச் செம்மலாய் இவர் விளங்கியதற்கு இச்சூழ்நிலையே அடித்தளமாயிற்று.

அதன்பின் ஒரத்தநாடு உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து, பொன்னனண்ணா களத்தில் வென்றாரிடம் பயின்று பள்ளி இறுதி வகுப்பில் சிறப்புடன் தேர்ச்சி பெற்றார். திருவையாறு அரசர் கல்லூரியில் மேனிலைக் கல்வி தொடர்ந்தது. அது தமிழ்ப்புலவர் (வித்துவான்) வகுப்பாக அமைந்தது.

தன் முயற்சியால் அரசர் கல்லூரியில் புகுமுக வகுப்புத் தேர்வில் வெற்றி பெற்று வித்துவான் வகுப்பில் சேர்ந்தார். சேரும்போது இலட்சுமணன் என்ற தன் பெயரை 'இலக்குவன்' என மாற்றிப் பதிவு செய்து கொண்டார்.

வித்துவான் இறுதித் தேர்வில் கல்லூரி முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். அதனால் தான் பயின்ற திருவையாற்றுக் கல்லூரியிலேயே ஆசிரியர் வேலை கிடைத்தது. ஆசிரியர் பணியைச் செம்மையாக ஆற்றிக் கொண்டே இடைநிலை வகுப்பு (Intermediate) முதல் பாக ஆங்கிலத்தையும் இளங்கலை வகுப்பு (B.A.) முதல்பாக

ஆங்கிலத்தையும் கற்றுத் தேர்வு எழுதி வெற்றி பெற்று பி.ஓ.எல். பட்டம் பெற்றார். பின்னர் எம்.ஏ. பட்டமும் பெற்றார்.

அதன்பின் தமிழ் மொழியின் தோற்றமும் வளர்ச்சியும் (Origin and growth of Tamil Language) என்னும் தலைப்பில் ஆய்வு செய்து எம்.ஓல்.எல் பட்டம் பெற்றார். பின்னர் தியாகராயர் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றிய போது பிஎச்.டி. பட்டம் பெற இருமுறைகள் பதிவு செய்தும் வாழ்க்கையில் ஏற்பட்ட பல இடர்ப்பாடுகளால் அப்பட்டம் பெறும் வாய்ப்பு தடைப்பட்டது. அதன்பின் தமது ஐம்பதாம் அகவையில் "THOLKAPPIYAM in English with critical studies" என்னும் தலைப்பில் ஆய்வு செய்து பிஎச்.டி. பட்டம் பெற்றார்.

இலக்குவனார் திருவையாற்றுக் கல்லூரியில் பயின்றபோது பி.எஸ். சுப்பிரமணிய சாத்திரியார் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து திருவையாறு அரசர் கல்லூரி முதல்வராக வந்து பணியேற்றார். அவர் வடமொழியில் முது கலைப்பட்டம் பெற்றவர். வடமொழியின் மீது கொண்டிருந்த பெரும்பற்றின் காரணமாக வகுப்புகளில் அவர் கூறும் கருத்துக்களால் இலக்குவனாருக்கும் கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதுண்டு. தமிழின் தொன்மை, தூய்மை, பற்றிய வகையில் அவர் தவறான கருத்துக்களாகக் கூறும் போது இலக்குவனார் எழுந்து மறுப்பார்.

## திருமணம்:

திருத்தணியில் ஆசிரியராகப் பணியாற்றும் போது இவர் நாயுடு வகுப்பைச் சேர்ந்த மலர்க்கொடி என்ற பெண்ணைக் கலப்புமணம் செய்து கொண்டார். பின்னர் தம்மை மிகவும் விரும்பிய மலர்க் கொடியின் தங்கை நீலகண்டேசுவரியையும் மணந்து கொண்டார். இவர்களுக்கு ஆறு ஆண்மக்களும் ஐந்து பெண்மக்களும் பிறந்தனர்.

## ஆசிரியப்பணி:

இவர் 1936இல் திருவாரூர் கழக உயர்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியேற்றார். மாணவர்களுக்குத் தமிழறிவோடு பகுத்தறிவையும் இனமான உணர்வையும் கலந்து ஊட்டினார். இளைஞர்கள் தன்மானம் உள்ளவர்களாகத் திகழ வேண்டும்; மூட நம்பிக்கைகளில் மூழ்கி முன்னேற்றமின்றி வாழக் கூடாது என்பதைத் தொடர்ந்து வலியுறுத்துவது இவர் வழக்கம். திருவாரூரில்



பணியாற்றிய போது, தமிழகத்தின் முன்னாள் முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி இவரிடம் பயின்றார்.

1942 – 1945–இல் திருவையாற்று அரசர் கல்லூரியிலும் 1945 – 1948–இல் நெல்லை இந்து கல்லூரியிலும், 1948 – 1952 ஆண்டுகளில் விருது நகர் செந்திற் குமார நாடார் கல்லூரியிலும் தமிழ்ப்பணிபுரிந்து வந்தார். விருதுநகர் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்டபோது 'துரத்தப்பட்டேன்' என்று இவர் எழுதியது ஒரு கலக்குக் கலக்கியது. போராட்ட வரலாறு தன் வரலாற்று நூல்களில் ஒரு திருப்புமுனை. தமிழ்ப்பற்றாளர்களிடமும், தமிழார்வலர்களிடமும் பெரும் வரவேற்பைப் பெற்றதுடன் கிளர்ச்சியைத் தூண்டும் நூல் எனப் பெரிதும் பேசப்பட்டது.

இவர் திருவெறும்பூர் முக்குலத்தோர் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியர். 1956–இல் ஈரோடு மகாசனக் கல்லூரி விரிவுரையாளர். 1958–இல் நாகர்கோயில் இந்து கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர். 1961 – 67 – வரை மதுரைத் தியாகராயர் கல்லூரித் தலைவர். 31.12.1970–இல் நாகர்கோயில் தெ.தி. இந்துக் கல்லூரி முதல்வர் பணியினின்றும் ஓய்வு. பின்னர் பொது நலப்பணி; தமிழ்ப் பணி.

## அண்ணா போற்றிய அறிஞர்:

இவர் தமிழக முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணாவினால் போற்றப்பட்டவர்; 7.1.63–ஆம் நாள் மதுரை தியாகராயர் கல்லூரியில், 'தத்துவப் போர்' என்ற தலைப்பில் அறிஞர் அண்ணா பேசினார். அப்போது அங்குத் தமிழ்த் துறைத் தலைவராயிருந்த இலக்குவனார் பேசுகையில் 'விலைவாசிப் போராட்டம் தேவையான ஒன்றுதான். அதைவிட முக்கியமாக இந்தி ஆட்சி மொழி ஆவதைத் தடுப்பதற்குரிய போராட்டங்களைத் தொடங்கவேண்டும்' என்று குறிப்பிட்டார்.

'இது நல்ல கருத்து; வரேற்கத்தக்கது; பொதுக் குழுவைக் கூட்டிப் போராட்டத் திட்டத்தை வகுப்பேன்' என்று அறிஞர் அண்ணா அவருடைய கோரிக்கையை ஏற்றுப் பேசினார். அதன்படி சட்ட எரிப்புப் போராட்டம் தொடங்கப்பட்டது. ஆட்சிமொழிச் சட்டப் பிரிவை எதிர்த்துப் பலர் சிறை நிரப்பினர்.

## இந்தி எதிர்ப்புப் போர்:

தமிழ் நலம் காப்பதற்காக இந்தி மொழித் திணிப்பை எதிர்த்துப் போரிட்ட தலைவர்களில் தலைமையிடம் பெறுபவர் இலக்குவனார்.

1965–இல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் வலுப்பெற்றது. இலக்குவனார், மாணவர் இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் தலைவராகவும், காரணராகவும் இருக்கின்றார் என்றும், அமைச்சர் களைக் கொல்லச் சதி செய்தார் என்றும் பதினான்கு குற்றச்சாட்டு களைக் கூறி, காவல்துறை இவரை 1.2.1965–ஆம் நாள் கைது செய்தது. இவரது வீடும், அச்சகமும் சோதனையிடப்பட்டன. பல நூல்களும் பொருள்களும் காவல் துறையினரால் கைப்பற்றப் பட்டன. இதன் காரணமாகக் கல்லூரியினின்றும் நீக்கப்பட்டார்.

இப்போர் பற்றி இவர் கூறுவது:

"என் வாழ்க்கையே தமிழ் நலம் நாடிய போராட்டக்களம்தான். இளமையில் வறுமையோடு போர்; சாதி வெறியோடு போர்; மூட நம்பிக்கைகளோடு போர்; தமிழ் உரிமைக்காகப் போர்; போர்! போர்! என்றும் ஓயாத போர்தான்!"

இவ்வாறு இவர் 'என் வாழ்க்கைப் போர்' என்ற நூலில் கூறுவது போல இவர் வாழ்க்கையே வாய்மைப் போராக அமைந்துவிட்டது.

அன்றைய அரசு அஞ்சும் வண்ணம் இந்தியை எதிர்த்து இவர் போராடினார். இவர் மீது தொடர்ந்த வழக்குகளுக்காக முப்பத்தாறு வழக்கறிஞர்கள் இவருக்காகத் தாமே முன் வந்து வழக்காடியமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ்ப் பணிகள்:

தமிழுக்கு இலக்குவனார் ஆற்றிய அரும் பணிகள் சிறப்பானவை. பதினான்கு அரிய தமிழ் நூல்களையும், ஐந்து ஆங்கில நூல்களையும் எழுதி வெளியிட்டார்.

இவரது நூல்கள்:

எழிலரசி

மாணவர் ஆற்றுப்படை

துரத்தப்பட்டேன்

அண்ணாவிற்குப் பாவியல் வாழ்த்து

வள்ளுவர் வகுத்த அரசியல்

வள்ளுவர் கண்ட இல்லறம்



தொல்காப்பிய ஆராய்ச்சி

பழந்தமிழ்

தமிழ் கற்பிக்கும் முறை

இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்

கரும வீரர் காமராசர்

என்வாழ்க்கைப் போர்

திருக்குறள் எளிய பொழிப்புரை

தொல்காப்பிய விளக்கம்

என்பன.

மேனாட்டினரும் அறியும் வண்ணம் தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டது இவரது அரிய பணியாகும்.

## எழுத்தாற்றல்:

தமிழ்நாட்டில் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பதில் தொல்காப்பியம் கற்றோர் மிகச்சிலரே. இலக்கணம் பயில்வோரும் சின்னூல்களையே பயின்றனர், தொன்னூற்கஞ்சினர். தொல் காப்பியம் கற்கத் தொடங்கியவர்களுள் இலக்குவனார் முதல் அணியினர். தொல்காப்பியத்தை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டோர் மிகச் சிலர். அவர்களுள் இவர் குறிப்பிடத் தக்கவர். இவர் எழுதிய தொல்காப்பிய ஆராய்ச்சி அறிஞர்களால் பெரிதும் பாராட்டப் பெறுகிறது. இவரின் தொல்காப்பிய ஆங்கில மொழி பெயர்ப்புப் பணி இவர் பணிகளின் தலையாயது. தமிழின் மூத்த இலக்கண மாகிய தொல்காப்பியத்தை உலகமொழியாம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உலகறியச் செய்தார். தொல்காப்பியனாரின் திறமான புலமையினைப் பிறநாட்டாரும் உணர்ந்து வணங்கச் செய்த பெருமையர். இந்த அரிய பெரிய பணியின் மூலம் பேரும் புகழும் பெற்றார். எவரும் செய்யத் துணியாத அருஞ் செயலைச் செய்ததின் வாயிலாகச் செயற்கரிய செய்த செம்மலாகிறார். தொல்காப்பியக் கல்வியில் தனியிடம் பெறுகிறார். இவருடைய தொல்காப்பிய ஆராய்ச்சி 1961இல் வெளிவந்தது. முன்னுரை, எழுத்து, சொல், பொருள் எனப் பெருந்தலைப்பில் பகுத்துக் கொண்டு முந்நூறு பக்க அளவில் பெயருக்கேற்ப அரிய ஆராய்ச்சி நூலைப் படைத்துள்ளார். தொல்காப்பியரின் பேரறிவு, பேராற்றல், பெரும் புலமை முதலியவற்றைத் தம் ஆராய்ச்சி வன்மையால் சிறந்த

எடுத்துக்காட்டுகளுடன் நிறுவுகிறார். தொல்காப்பியக் கல்வியில் ஆழங்கால் பட்டவ ராதலால் எழுத்து, சொல், அதிகாரங்களின் மொழியியல் நுட்பங்களையும், பொருளதிகாரம் புகலும் சமுதாயக் கருத்துக்களையும் திட்பநுட்பத்துடன் விளக்குந்திறன் வியந்து போற்றுதற்குரியது. செய்யுளியல், உவம இயல்களைக் கொண்டு தமிழரின் இலக்கியக் கோட்பாட்டை நிறுவியுள்ளதிறன் நினைந்து இன்புறத்தக்கது. அகத்திணை இயலை விளக்கும்போது காதலே இலக்கியத்தின் ஊற்றுக்கண் (தொல்காப்பிய ஆராய்ச்சி பக். 129) எனக் குறிப்பிடுவது இவரது நுண்மான் நுழை புலத்திற்குச் சிறந்ததோர் சான்றாகும்.

தொல்காப்பியம் வெறும் இலக்கண நூல் மட்டுமன்று. தமிழரின் வாழ்க்கையின் விளக்கக் கருவூலம்; பழந்தமிழர் வாழ்வு பளிச்சிடும் காலக்கண்ணாடி. பண்டைத் தமிழர் வாழ்வை அறிதற்குத் தொல்காப்பியமின்றிப் பிற சான்றில்லை என இவர் அறுதியிட்டுக் கூறுகின்றார் (தொல். ஆரா. பக். 285)

"தமிழ் எழுத்துக்களை வகுத்துப் பெயரிடும் காலத்தில் நம் தமிழ் முன்னோர் வாழ்வியல் மெய்யுணர்வில் சிறந்திருந்தனர் என்பதற்கு உயிர், மெய் என்ற எழுத்துக்களின் பெயரீடே சிறந்த சான்றாகும்" (தொல். ஆரா. பக். 37) என இவர் தமிழர்தம் மெய்யியல் கொள்கையின் மேன்மையினை விளக்குகிறார்.

பேராசிரியர் இலக்குவனாரின் தமிழியல் கொள்கையை, "தமிழ் மொழி இனிமையானது; தொன்மையானது; வளமானது; கற்பதற்கு எளிமையானது என்பனவெல்லாம் தமிழர்களேயறியார்... தமிழ் நாட்டளவிலும் எல்லாத்துறைகளிலும் பயன்படுகருவியாய் அது அமைந்திலது. அமைவதற்குரிய முயற்சியில் தமிழர்கள் ஈடுபடல் வேண்டும். தமிழ் மீண்டும் மலர்ச்சி பெறுவதற்குரிய வழி இதுதான்."

"கல்வி மொழியாகவும், கடவுள் வழிபாட்டு மொழியாகவும், அரசாள் மொழியாகவும், அறிவியல் மொழியாகவும் தமிழ் ஆகும் நாளே (பழந்தமிழ் பக். 235) உயர்வு பெறும் நாள்" என வரும் பகுதிகள் விளக்கிக் கட்டியங்கூறுவதாக அமைந்துள்ளன.

"மேலை நாட்டு அறிஞர்கள் இங்கு வந்து தமிழையும் பிற மொழிகளையும் கற்றனர். 'தமிழும் அதன் கிளை மொழிகளும் தனிக் குடும்பத்தைச் சார்ந்தன. தமிழ் வேறு; ஆரியம் வேறு; தமிழ் ஆரிய மொழியின் சிதைவு மொழிகளுள் ஒன்றன்று' என்று நிலைநாட்டினார். இவ்வகையில் பேரறிஞர் கால்டு வெல் அவர்கள் செய்த தொண்டினை நாம் என்றும் போற்றுதற்குரியோம். அவர் நன்கு ஆராய்ந்து இயற்றியுள்ள 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' எனும் ஒப்புயர்வற்ற நூலைத் தமிழ் நலம் கருதுவார் யாவரும் கற்றுத் தெளிதல் வேண்டும். அவர், தமிழின் இயல்பும் சிறப்பும் பற்றித் தெரிவித்துள்ள கருத்துக்கள் நடுநிலை பிறழாதன; பொன்னே போல் போற்றத்தக்கன" (பழந்தமிழ் பக். XIII) என்ற மேற்கோள் வாயிலாகச் செந்தமிழின் சிறப்பெல்லாம், சீர்த்தியெல்லாம் மேலைநாட்டினர் உணர்த்திய பின்னரே தமிழர்கள் உணரலாயினர் என்பதை விளக்குகின்றது.



'கருமவீரர் காமராசர்' என்னும் வாழ்க்கை வரலாற்று நூலில் இலக்குவனார் காமராசரின் கல்விப் பணிகளை நடுநிலையுடன் போற்றுகிறார். வரலாற்று நாயகரது பண்பு நலன்களை விருப்பு வெறுப்பின்றி விளக்கியுள்ளார். பெருந்தலைவர் காமராசரின் தலைமைப் பண்புகளைக் காய்தல் உவத்தலின்றி ஆராய்கிறார். பலநூறு தொடக்கப் பள்ளிகள் மூலம் எளியோர்க்குக் கல்வி நல்கிய வள்ளல் காமராசர் எனப் போற்றுகிறார். ஒவ்வொரு ஐந்து மைலிலும் ஒரு பள்ளி; பயில்வோர்க்கு மதிய உணவு என்னும் திட்டத்தை உருவாக்கி எல்லோர்க்கும் கல்வி வழங்கிய திறத்தினை விரிவாக விளக்கியுள்ளார். இந்தியத் துணைக் கண்டத்திற்கு இருமுறை பிரதமர்களை உருவாக்கிய பெருமை பெருந்தலைவர் காமராசரையே சாரும் என்பதைச் சான்றாதாரங்களுடன் விளக்கியுள்ளார். பெரியார் வழி நின்று காமராசரை மதிப்பிடுவதாக அந்நூலில் தன்னிலை விளக்கம் கூறுகிறார். இந்நூல் சிறிய வாழ்க்கை வரலாற்று நூலாயினும் நடுநிலை பிறழாத நன்னூல். எளிய குடும்பத்தில் தோன்றித் தொண்டனாகத் தொடங்கித் தலைவனாக உயர்ந்த ஏழை பங்காளனின் சுவைமிக்க வரலாறு; தூய்மையும், துணிவும், தொண்டுமே காமராசர்க்குத் தலைமைப் பேறு தந்தன என்பது இவரது கணிப்பு.

பேராசிரியர் இலக்குவனார் தமிழ் முழுதும் அறிந்தவராதலால் "இலக்கியங் கூறும் தமிழர் வாழ்வியல்" என்னும் தலைப்பில் பெருந்திட்டத்தில் நூல்கள் எழுத உறுதி பூண்டிருந்தார். அத்திட்டத்தின் முதல் நூலாக "சங்க காலம்" எனுந் தலைப்பில் நூல் வெளியிட்டார். பதினாறு அரிய தலைப்புகளில் நூலைப் பகுத்துள்ள திறமே இலக்குவனாரின் அறிவாற்றலுக்கும் எழுத்தாற்றலுக்கும் ஏற்ற சான்றாக அமைகிறது. திட்டமிட்டு எழுதப்பெற்ற நூலாதலால் தமிழர்

வாழ்வு பற்றிய அடிப்படைச் செய்திகள் அனைத்தும் தொகுத்து விளக்கப்பெற்றுள்ளன. "தமிழ் இனத்தின் தொன்மை வரலாற்றைத் தமிழரே அறிந்திலர். தமிழர் வரலாறு இன்னும் புதைபொருளாகவே இருந்து வருகின்றது. வரலாற்றாசிரியர் பலருக்குத் தமிழ் இலக்கிய அறிவு கிடையாது" (இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல் – சங்க காலம். முகவுரை) என அறுதியிட்டு உரைக்கிறார்.

"சங்கப் புலவர்கள் அமைச்சர்களாகவும், தூதர்களாகவும், ஆளுநர்களாகவும், மெய்யுணர்வாளர்களாகவும், மக்கள் துயர் போக்கும் சான்றோர்களாகவும், பிறர்க்கென வாழும் பெரியோர் களாகவும் வாழ்ந்து, நாட்டுத் தொண்டும், மொழித் தொண்டும் மக்கள் தொண்டும் ஆற்றினர்" (சங்க காலம் பக். 158) என்பது சங்கப் புலவர்களைப் பற்றிய இவரது மதிப்பீடாகும்.

## திருக்குறள் உரை:

தமிழில் பல பதிப்புகள் மிகுதியாகப் பெற்ற ஒரே நூல் திருக்குறள். குறளுக்கு உரைவரைந்த பழைய உரையாசிரியர் பலர். இருபதாம் நூற்றாண்டில் தமிழ் மரபு வழி உரைகள் எழுந்தன. பாவாணர், பாவேந்தர், புலவர் குழந்தை, வ.சுப. மாணிக்கனார், கு.ச.ஆனந்தன் இலக்குவனார் முதலிய அறிஞர் பெருமக்களின் உரைகள் தமிழ் நெறி சான்றன. புராண, இதிகாச கருத்துக்களையும் சனாதன வழக்குகளையும் ஏற்றுக் கொள்ளாத பகுத்தறிவு நோக்கில் அறிவார்ந்த புத்துரைகளை இவர்கள் வகுத்துள்ளனர். இலக்குவ னார் உரை பொதுமக்களுக்கான எளிமையான உரையாயினும் இவர்தம் பகுத்தறிவுக் கோட்பாடுகளும், சீர்திருத்தக் கருத்துக்களும் பல இடங்களில் பளிச்சிடுகின்றன. இத்தெளிவுரையின் மூலம் இவர் சிறந்த உரையாசிரியராகவும் திகழ்கிறார்.

இலக்குவனார் நூலாசிரியர், உரையாசிரியர், போதக ஆசிரியர், இதழாசிரியர், மொழி பெயர்ப்பாளர், சொற்பொழிவாளர் என பலநிலைகளில் தமிழுக்குழைத்த பெருமகனார்.

சிந்தனையாளர் இலக்குவனார் சில நூல்களே இயற்றினாலும் அவை சிறப்பானவை. தமிழ், தமிழர் சிறப்பை உணர்த்துபவை. பண்பட்ட இலக்கிய விளைச்சல். தமிழ் நிலத்தின் – தமிழர் வாழ்வின் அடையாளங் காட்டும் ஆய்வேடுகள். கருத்தில் தெளிவும், எழுத்து நடையில் எளிமையும் பார்வையில் புதிய நோக்கும் கொண்டு இலங்குபவை இலக்குவனாரின் இனிய நூல்கள்.



## இதழாசிரியர்:

சங்க இலக்கியம், இலக்கியம், திராவிடக் கூட்டரசு, (Dravidian Federation) – குறள் நெறி என்னும் இதழ்களைத் தொடங்கினார். அவற்றின் ஆசிரியராகவும் வெளியீட்டாளராகவும் பொறுப்பாள ராகவும் இருந்து தம் கொள்கைகளைப் பரப்பினார். தமிழ்ப் பேராசிரியர்களில் தமது வாழ்க்கை முழுவதும் இதழ் வெளியீட்டுப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு மொழித் தொண்டும் இனத் தொண்டும் ஆற்றியவர் இலக்குவனார் ஒருவரே என்பது எவரும் மறுக்கவொண்ணாத வரலாற்றுண்மை.

இலக்குவனார் கூறுவது போல் இவர் வாழ்க்கை முழுதும் போராட்டம். இதில் இதழ்கள் நடத்துவதோ இவருக்குக் கொண் டாட்டம். அதனால் குடும்பம் உற்றதோ திண்டாட்டம். இலக்குவனார் அன்றி எவருக்கு வரும் இந்தத் துணிவு! யார் செய்வார் இத்தகைய செயல்களை? தமிழ் காக்கப் பிறந்தமகன் தம்மை அழித்துக் கொண்டு இதழ்களால் தமிழ் நெறி வளர்த்தார். வகை வகையாய் இதழ்கள் தொடங்கினார். வளமான கருத்துக்களை வழங்கினார். பகுத்தறிவு மூலம் புதியதோர் உலகம் காணத் தம் எழுத்துக்கள் மூலம் கருத்துப் புரட்சி செய்தார். தன்மானத் தமிழ்த் தொண்டர்க்கு அன்றைய தமிழகம் கைகொடுக்கவில்லை. தமிழரின் போராட்ட வரலாற்றில் இது போன்ற அவலக் காட்சிகள் ஒன்றிரண்டல்ல. ஒரு நூறாகும். இதழ்கள் சிற்றேடுகளே ஆயினும், சில காலமே வாழ்ந்தாலும் அவற்றின் பதிவுகளும், பாதிப்புகளும் பல திறத்தன.

## தமிழ்க் காப்புக்கழகம்

இலக்குவனார் தமிழ்ப்பற்று மிக்கவர். தமிழ் மொழியைக் காப்பதற்காகவே வாழ்க்கை முழுவதும் போராடியவர். தமிழைப் பாதுகாப்பதற்கும், பலதுறைகளில் வளர்ப்பதற்கும் மதுரையில் தமிழ்ப் பாதுகாப்புக் கழகம் என்ற பெயருடன் ஒரு கழகத்தை நிறுவினார். அதன் சார்பில் மாணவர்களுடன் ஊர்வலமாகச் சென்று வணிக நிறுவனங்கள், விற்பனையகங்கள், கடைகள் முதலியவற்றின் பெயர்ப்பலகைகளில் உள்ள பெயர்களைத் தமிழில் எழுதும்படி கோரினார். புரட்சிக் கவிஞரின் தமிழியக்கம் கூறும் கருத்துக்களையே இக்கழகத்தின் கொள்கைகள் ஆக்கினார். பாவேந்தர் பாரதிதாசன் இக்கழகத்தின் பணிகளைப் பாராட்டி உணர்ச்சி பொங்கப் பாடிப் பரவியுள்ளார்.

தமிழ் இயக்கம் கண்ட தன்மானச் சிங்கமாகத் திகழ்ந்த இலக்குவனாரைத் 'தமிழ் இயக்கத்தின் வேர்' ஆணிவேர் எனலாம்.

தமிழின் பெருமை பற்றியும், வளமை பற்றியும் பலர் பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள். ஆனால், அதை ஒரு இயக்கமாக நடத்தித் தமிழ் வளர்த்த பெருமை இலக்குவனாருக்கு உண்டு. தமிழ் இயக்கத்துக்கென்றே தனி இதழ் நடத்தித் தமிழ் எழுச்சிக்குக் களம் அமைத்து உதவினார்.

## தமிழ் உரிமைப் பெருநடைப் பயணம்:

1965 மே திங்களில் தமிழ் மொழிவழிப் பாட போதனையின் தேவையை வலியுறுத்தி இவர் கொதியழல் சீற்றம் கொண்டு எரிசினக் கொற்றவை எனப் பொங்கி எழுந்து 'நான் ஏற்றதொரு கருத்தை எவர் தடுப்பினும் அஞ்சேன், நில்லேன்' எனக் குமரி முனையிலிருந்து சென்னை வரை 'தமிழ் உரிமைப் பெருநடைப் பயணம்' துவக்கினார். அதில் கலந்து கொள்ள இசைவு தெரிவித்து நாற்பதின்மர் மடல் எழுதியிருந்தனர். 1965 மே 5–இல் பயணம் தொடங்க இருந்தனர். ஆனால், அரசு, இலக்குவனாரை வலிமை வாய்ந்த ஒரு தமிழியக்கமாகக் கருதி, முன்கூட்டி மிக்க கடுமையான இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் (DIR) இவரை 1.5.65 அன்றே கைது செய்தது.

**"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை – எமை**
**மாட்ட நினைக்கும் சிறைச்சாலை"**

என்ற பாவேந்தரின் வைர வரிகளுக்கு இலக்கியமாக இலக்குவனார் சிறையில் தமிழ்த்தவம் செய்தார்.

## திருக்குறள் வாழ்வு:

வள்ளுவரின் குறளைப் பரப்பியவர் மட்டுமல்லர்; அதனையே வாழ்வாகக் கொண்டவர் இலக்குவனார்.

'என்னை உருவாக்கியதில் பெரும்பங்கு திருக்குறளுக்கு உண்டு' என்று உரைத்த உத்தமர் இவர்.

தொல்காப்பியர் நாள், திருவள்ளுவர் நாள், இளங்கோவடிகள் நாள், ஔவை திருநாள் என நால்வர் நாட்களைக் கொண்டாட வேண்டும் என்பது இவர் கருத்து. இவர் வேண்டுகோளை அரசு ஏற்று, தைத்திங்கள் இரண்டாம் நாளைத் திருவள்ளுவர் நாள் என்றும், சித்திரைத்திங்கள் முதல் நாளை 'இளங்கோ அடிகள்' நாளாகவும் கொண்டாடி வருகிறது.



## பண்புகள்:

சோழ நாட்டில் தோன்றிப் பாண்டிய நாட்டிலும் நாஞ்சில் நாட்டிலும் பைந்தமிழ்ப் பயிர் வளர்த்தார். இலட்சியத்தில் தெளிவும் கொள்கை உறுதியும் கொண்ட பேராசிரியரின் பாசறையில் வடிக்கப் பட்ட கூர்வேல்கள் பல. தீட்டப்பட்ட வாள்கள் பல. வாழ்நாள் முழுதும் கொள்கைகளைக் கைவிடாது போராடிய இவரது வாழ்வே வீர காவியமாகும். இவர் வாழ்க்கை முழுவதுமே போராட்டம். போராட்டக் காலங்களிலும் தமிழ்ப் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். பணி நீக்கம் செய்யப் பெற்ற போதும் உள்ளந்தளராது உயர்ந்த இலட்சியங்களுக்காக உழைத்தார். நெஞ்சுறுதி மிக்கவராதலால் தமக்குச் சரி என்று பட்டதை எப்போதும் எடுத்துக் கூறத் தயங்கியதில்லை. தோல்வி கண்டு துவண்டுவிடாமல் தம்முடைய அறிவாற்றலையும் ஆளுமையையும் தமிழ்க்காப்பிற்கும் தமிழ் வளர்ச்சிக்குமே அளித்தார். தானுண்டு; தன் வயிறுண்டு; தன் வேலை உண்டு என்னும் குறுகிய வட்டத்தில் தம்மை அடைத்துக் கொள்ளாமல் தமிழ், தமிழர், தமிழ் நாடு என்னும் பேரெல்லையைத் தம் வாழ்வுக் களமாகக் கொண்டு வாழ்ந்த பெருமகனார். கல்வியால், புலமையால், அறிவாற்றலால், ஆளுமையால் பேராசிரியர்களில் தலைமை சான்றவராகத் திகழ்ந்தார். தலைமைப் பண்புகள் மிக்கிருந்தவ ராதலால் தாழ்ந்து பணிந்துபோக ஒருபோதும் இசையார். போக்குணம் மிக்க பேராசிரியர். தமிழுக்குத் தீமை வந்துற்ற போதெல்லாம் தலைமையேற்றுப் போர்க்கொடி உயர்த்தினார்.

நெற்களஞ்சியமாம் சோழநாட்டில் தோன்றிய தமிழ்க் களஞ்சியம் இலக்குவனார். வீர மறவர் குலத் தோன்றலாய் உதித்த இலக்குவனார். மரபு வழி புலமைச் சங்கிலியின் வலிமை வாய்ந்த வளையம். நெடிதுயர்ந்த தோற்றமும், நிமிர்ந்த நடையும் யார்க்கும் அஞ்சா ஞானச்செருக்கும், நேர்மைத் திறமும் அமைந்தவர். தோற்றத்தாலும் தோலா மொழிப் புலமையாலும் மாற்றாரை வெல்லும் மதி நுட்பத்தாலும் தமிழ் இலக்கிய வரலாற்றில் என்றும் ஒளி வீசும் அணையா விளக்காகத் திகழ்கிறார்.

புலமையாளராக மட்டும் இவர் வாழவில்லை. பேராசிரியர் பணியைத் தொழிலாக மட்டும் ஒருபோதும் கருதியதில்லை. இவர்

நினைப்பெல்லாம் தமிழ், தமிழர் உயர்வே. சமுதாய உணர்வுடைய பேராசிரியர்களில் இவர் தலையாயவர். தமிழ் இவர்க்கு உயிர்த் துணை; தமிழால் இவர் உயர்ந்தார்; தம் வாழ்வால் தமிழை உயர்த்தினார். தமிழ்க்காப்பு இவர்மூச்சு; தமிழர் நலமே எப்போதும் இவர் பேச்சு.

பேச்சும் எழுத்தும்; சொல்லும் செயலும் தமிழ் நெறி சார்ந்தவை. தமிழ் நெறி இயக்கம் கண்ட தலைவர்களில் தலைமைத் தச்சனாகத் திகழ்கிறார். வள வாழ்வு இவர் நோக்கமன்று. தமிழுக்குத் தமிழர்க்கு வளஞ் சேர்ப்பதே இவர் வாழ்க்கையின் நோக்கம். இராமனுக்கு இலக்குவன் தன்னை மறந்து தொண்டாற்றியதைப் போல தமிழுக்குத் தம் வாழ்வையே தியாகம் செய்தவர் இலக்குவனார். தமிழுக்குழைத்தோர் சாவதில்லை என்னும் சான்றோர் மொழிக் கேற்ப நல்லோர் உள்ளங்களிலும் தமிழர் இல்லங்களிலும் என்றும் வாழ்கிறார் இலக்குவனார். இலக்குவனாரின் இனியகனவுகள் நம் காலத்தில் நனவாகின்றன.